# தெற்கு-தெற்கு ஒத்துழைப்புக்கான சர்வதேச தினம்

தெற்கு-தெற்கு ஒத்துழைப்பு என்பது தெற்கின் மக்கள் மற்றும் நாடுகளிடையே தேசிய நல்வாழ்வுக்கு பங்களிக்கின்ற, அவர்களின் தேசிய மற்றும் கூட்டு சுய-சார்பு மற்றும் நிலையான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல் உள்ளிட்ட சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான அவர்களின் ஒற்றுமையின் வெளிப்பாடாகும். செப்டம்பர் 12 ஆம் திகதி கொண்டாடப்படும் தெற்கு-தெற்கு ஒத்துழைப்புக்கான சர்வதேச தினம், இந்த ஆண்டுக்கான கருப்பொருளாக "ஒற்றுமை, சமத்துவம் மற்றும் பங்காண்மை: SDGகளை அடைவதற்கான தெற்கு-தெற்கு ஒத்துழைப்பை வெளிப்படுத்தல்" என்ற விடயத்தில் கவனம் செலுத்துகிறது.

தற்போதைய அபிவிருத்தி சவால்களுக்கான குறிப்பாக காலநிலை மாற்றம் போன்ற சவால்களின் போது நாம் நிவர்த்திக்க முயலுகின்ற வினைத்திறனான தீர்வுகளைக் காண்பதற்கு எல்லைகளுக்குள்ளும் எல்லைகளைக் கடந்ததுமான நாடுகளின் ஒத்துழைப்பு அவசியமானதாகும்.

## தெற்கு-தெற்கு ஒத்துழைப்பின் கீழ் இலங்கையில் விவசாய தொழில்துறையில் நிலைபேறான சக்தி பயன்பாடுகளுக்கு மாறுவதற்கான செயற்திட்டமானது TSSC செயற்திட்ட

இலங்கை மற்றும் சீனாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP) இலங்கை, சீனா மற்றும் எத்தியோப்பியா அரசாங்கங்களுடன் இணைந்து TSSC செயற்திட்டம் எனப்படும் தெற்கு-தெற்கு ஒத்துழைப்பின் கீழ் நிலைபேறான சக்தியை பயன்படுத்துவதை நோக்கி விவசாய - தொழிற்துறையை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ள ஓர் செயற்திட்டத்தை அமுல்படுத்துகின்றது. இந்த திட்டமானது 2030 ஆம் ஆண்டளவில் இலங்கை அதன் பசுமை இல்ல வாயு (GHG) வெளியேற்றத்தை குறைப்பதற்கான இலக்குகளை அடைவதற்கு ஆதரவளிக்கும் அதே வேளையில், சர்வதேச ஒத்துழைப்பு, மேம்படுத்தப்பட்ட சேவை வழங்கலுக்கான சக்தி அணுகல் மற்றும் நிலைபேறான ஒருங்கிணைந்த விவசாய நடைமுறைகள் தொடர்பான நிலையான அபிவிருத்தி சவால்களை நிவர்த்தி செய்கின்றது.

பல நாடுகளுடன் இணைந்து இலங்கையும் பாரிஸ் உடன்படிக்கைக்கு உறுதியளித்துள்ளது. குறைந்த காபன் வெளியேற்றம் மற்றும் மிகவும் நலிவடைந்த நிலைமை இருந்தபோதிலும், பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை 14.5% இனால் குறைப்பதற்கு இலங்கை உறுதிபூண்டுள்ளது. இந்த தீவின் அரசு மின்சார உற்பத்தியில் 70% புதுப்பிக்கத்தக்க சக்தி பயன்பாட்டை 2030 ஆம் ஆண்டளவில் அடைவதற்கான இலக்குகளையும் நிறுவியுள்ளது. இலங்கை 2050 ஆம் ஆண்டளவில் காபன் நடுநிலைத்தன்மையை அடைவதற்கு எதிர்பார்த்துள்ளதுடன் அதன் அனல்மின் உற்பத்தி நிலையங்களின் இயலளவை அதிகரிப்பதில்லை என்பதற்கு உறுதிபூண்டுள்ளது.

## புதியது, பசுமையானது மற்றும் நிலையானது.

Jewelex Agri Kumaragama Pvt Ltd, தனமல்விலவில் உள்ள ஒரு மாம்பழத்தோட்டமாகும். அறுவடை செய்தவுடன் பழங்கள் புதியதாக இருப்பதற்கு, பதப்படுத்துதல் மற்றும் குளிர் அறை சேமிப்பு ஆகியவை அவசியமாகும். எனவே, இந்த வணிகத்திற்கு அதனது நாளாந்த செயற்பாடுகளுக்கு தொடர்ச்சியான மின்சாரம் தேவைப்படுகிறது. Jewelex ஒவ்வொரு நாளும் 3,000-4,000 மாம்பழங்களை அறுவடை செய்கிறது, சரியான முறையில் சேமிக்கப்படாவிட்டால் அதில் 40% வீணாகிவிடும். ஒவ்வொரு மாதமும் Jewelex 2500முறா மின்சாரத்தைப் பயன்படுத்துகிறது. UNDP மற்றும் TSSC ஆகியவை சூரிய சக்தியில் இயங்கும் குளிர் அறை அலகு, 10KW சூரியப்படல்கள் மற்றும் 10KW மின்பிறப்பாக்கிக்காக ரூபா. 7,025,500/- இனை முதலீடு செய்தன. இந்த முதலீடு Jewelex இற்கு ஒவ்வொரு மாதமும் 400,000 ரூபாய் வரை சேமிக்க உதவுவதுடன் அவர்கள் அறுவடை செய்த பழங்களை 15 நாட்கள் வரை சேமிக்க அனுமதிக்கின்றது.

**"எதிர்கால விவசாயிகள் தங்கள் முயற்சிகளை லாபகரமானதாக மாற்றுவதற்கு சூரிய சக்தியில் முதலீடு செய்ய வேண்டும்" - மேஜர் ஜெனரல் புவெனேகா குணரத்னே (Jewelex Agri உரிமையாளர்)**










## நிலைபேறான சக்திமுதல்களுடன் சிறு வணிகங்களை வலுவூட்டுதல்.

மத்தபொலவைச் சேர்ந்த சோமரத்ன, நிக்காவலவைச் சேர்ந்த நிலாந்த மற்றும் கந்தளாயைச் சேர்ந்த சுனில் ஆகிய மூவரும் சிறியளவிலான விவசாயிகள் புதுப்பிக்கத்தக்க சக்திக்கான மாற்றத்தை ஆதரிக்கின்ற TSSC இன் முதலீட்டினுடைய மூன்று பயனாளர்களாவர். இலங்கையின் கிராமப்புற மற்றும் அபிவிருத்தியடையாத பகுதிகளைச் சேர்ந்த இந்த விவசாயிகள் இப்போது சூரிய ஒளி மூலமான தெளிப்பான்கள், சூரிய மூலமான பூச்சி பொறிகள் மற்றும் சூரிய ஒளி மூலமான விரட்டிகளைப் பயன்படுத்தி தங்கள் பயிர்களை தீங்கு விளைவிக்கும் பீடைகளிலிருந்து பாதுகாக்கின்றனர். இது சுற்றுச்சூழலுக்கும் அவர்களின் பயிர்களுக்கும் குறைந்தளவான தாக்கத்தையே ஏற்படுத்தும் அதே வேளையில் அவர்களுக்கு அதிகளவான பணத்தையும் முயற்சியையும் சேமிக்கும் ஓர் முன்முயற்சியாகும். இது அந்தந்த உள்ளூர் சமூகங்களுக்கு ஒரு நேர்மறையான முன்மாதிரியை உருவாக்குவதுடன் சூரிய சக்திக்கு மாறுவதற்கு அவர்களை ஊக்குவிக்கிறது.

**"புதிய விவசாயிகள் அத்தகைய புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் நிலையான சக்தி தீர்வுகள் தொடர்பில் தங்களை நன்கு பரீட்சயமாக்கியிருக்க வேண்டும் அது நமது விளைச்சலை அதிகரிக்க உதவுவதுடன், இதுவே விவசாயத்தின் எதிர்காலமாகும்" - சுனில்**

## நிலையான எதிர்காலத்தை நோக்கி முன்னேறுதல்

சிலாபம், விலத்தவவில் உள்ள கமல் இறால் பண்ணை 2 ஏக்கருக்கு மேல் பரந்து விரிந்த பண்ணையுடன் முன்னணி இறால் ஏற்றுமதியாளராக உள்ளது. இறால் குடம்பிகளை இறால்களாக வளர்க்கும் செயன்முறைக்கு அண்ணளவாக 4 முதல் 5 மாதங்கள் ஆகும், ஆனால் அதிகமான சக்தி தேவைப்படும் முயற்சியாகும். இறால் பண்ணைகளுக்கு ஒரு நாளைக்கு குறைந்தது 22 மணிநேரம் காற்றோட்டம் அவசியமாகும், இதனால் பண்ணைக்கு ஒவ்வொரு மாதமும் ஒரு மில்லியன் ரூபாய் செலவாகும். UNDPயின் முன்முயற்சி கமல் இறால் பண்ணைக்கு சூரிய ஒளி மூலமாக இயங்கும் காற்றூட்டிகளில் முதலீடு செய்வதற்கான மூலதனத்தை வழங்கியது. இது பண்ணையை செலவீனங்களைச் சேமிக்கவும் அதன் இலாபத்தை அதிகரிக்கவும் அனுமதிப்பது மட்டுமல்லாமல், முழுத் தொழிலையும் புதுப்பிக்கத்தக்க சக்தியை நோக்கி மாற்றுவதற்கான அடித்தளத்தையும் அமைக்கின்றது.

**"சூரிய சக்திக்கு மாறுவதன் பலன்களை நான் நேரில் பார்த்திருக்கிறேன். நமது நாடு மின் நெருக்கடியை எதிர்கொள்ளும் இந்த நேரத்தில், இது ஒரு செலவு குறைந்த தீர்வாக உள்ளது. மின்சாரத்தில் நமது சேமிப்பு கணிசமாக உள்ளதால் எங்கள் விவசாயம் செழிக்க உதவியாக காணப்பட்டது."- நிமல்**





## பிரதான முடிவுகள்:

- இந்த செயற்திட்டத்தின் மூலமாக இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் (SLSEA) ஆதரவுடன் எரிசக்தி சேமிப்பு மற்றும் சூரியப்படல், உயிர்வாயு மற்றும் VFD (மின்மாற்றிகள்) ஆகியவற்றின் பசுமை இல்ல வாயு குறைப்பைக் கண்காணிப்பதற்கான சக்தி தரவு முகாமைத்துவ அமைப்பு (EDMS) உருவாக்கப்பட்டது.
- தகவல் சேகரிப்பு மற்றும் EDMS ஐ புதுப்பிப்பதற்காக 05 மாகாணங்களுக்கு இடையே தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டன.
- கிழக்கு, வடமேல், வடக்கு, தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கான விவசாயத் துறைக்கான ஐந்து மாகாண சக்தித் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டில் தொடர்புடைய மாகாணத் தலைவர்களிடம் கையளிக்கப்படும்.
- 80 பெண்கள் மற்றும் 200 நலிவடையக்கூடிய குழுக்கள் உட்பட 233 பயனாளிகளுக்கு எட்டு வெவ்வேறு புதுப்பிக்கத்தக்க சக்திமுதலுக்கான தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்கப்பட்டன.
- SLSEA உடன் இணைந்து, இலங்கையில் விவசாய தொழில்துறைக்கான புதுப்பிக்கத்தக்க சக்திமுதலுக்கான விருது வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டது.

### பரீட்சார்த்த RET தொழில்நுட்பங்களிலிருந்தான செலவீனம், சக்தி சேமிப்பு & GHG வெளியேற்றக் குறைப்பு

#### சூரிய சக்தியில் இயங்கும் குளிர் அறைகள்

வருடாந்த சக்தி சேமிப்பு (மின்சாரம்): 12,900 kWh

வருடாந்த மின்சார செலவீன சேமிப்பு: 374,000 LKR

வருடாந்த புர்பு வெளியேற்ற குறைப்பு: 7 தொன் CO2 க்கு சமமானது

#### இறால் பண்ணைகளுக்கான சூரிய சக்தியில் இயங்கும் காற்றூட்டிகள்

வருடாந்த சக்தி சேமிப்பு (மின்சாரம்): 13,680 kWh

வருடாந்த செலவீன சேமிப்பு: 397,000 LKR

வருடாந்த புர்பு வெளியேற்ற குறைப்பு: 7.4 தொன் CO2 க்கு சமமானது

#### பால் சேகரிப்பு நிலையங்களுக்கான 3 கிலோவாற்று சூரியபடல் அமைப்பு

வருடாந்த சக்தி சேமிப்பு (மின்சாரம்): 12,300 kWh

வருடாந்த செலவீன சேமிப்பு: 360,000 LKR

வருடாந்த புர்பு வெளியேற்ற குறைப்பு: 6.6 தொன் CO2 க்கு சமமானது

#### சூரிய சக்தியில் இயங்கும் தன்னியக்க பச்சை இல்லம்

வருடாந்த சக்தி சேமிப்பு (மின்சாரம்): 12,900 kWh

வருடாந்த செலவீன சேமிப்பு: 374,000 LKR

வருடாந்த புர்பு வெளியேற்ற குறைப்பு: 7 தொன் CO2 க்கு சமமானது

#### மின்சாரம் உற்பத்தியுடனான உயிர்வாயு ஆலைகள்

வருடாந்த சக்தி சேமிப்பு (மின்சாரம்): 15,000 kWh

வருடாந்த செலவீன சேமிப்பு: 436,200 LKR

வருடாந்த புர்பு வெளியேற்ற குறைப்பு: 10.3 தொன் CO2 க்கு சமமானது

### சூரிய சக்தியில் இயங்கும் தெளிப்பான்களை கையளித்தல்

இந்த செயற்திட்டம் 2022 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 மாகாணங்களில் (ஒவ்வொரு மாகாணத்திலும் 15 விவசாயிகள்) 75 விவசாயிகளுக்கு 75 சூரிய சக்தியில் இயங்கும் தெளிப்பான்களை வெற்றிகரமாக கையளித்தது. இந்த சூரிய சக்தியில் இயங்கும் தெளிப்பான் வருடாந்த வருமானத்தை அதிகரிப்பதற்கும், எரிபொருள் செலவீனங்கள் மற்றும் தொழிலாளர் செலவீனங்களைக் குறைப்பதன் மூலமாக உற்பத்திச் செலவீனங்களைக் குறைப்பதற்கும், கடின உழைப்புத் தேவைகள் மற்றும் GHG வெளியேற்றக் குறைப்பிற்கும் துணைபுரிகிறது. இந்த உபகரணங்கள் 10 பெண்கள் மற்றும் நலிவடையக்கூடிய குழுக்கள் உட்பட 75 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

### சூரிய சக்தியில் இயங்கும் விலங்கு விரட்டிகளை கையளித்தல்

இந்த செயற்திட்டம் 2022 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 மாகாணங்களில் (ஒவ்வொரு மாகாணத்திலும் 15 விவசாயிகள்) 75 விவசாயிகளுக்கு 75 சூரியசக்தி மூலமாக இயங்கும் விலங்கு விரட்டிகளை வெற்றிகரமாக கையளித்தது. இந்த செயற்திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்பட்ட சூரிய சக்தி மூலமான விலங்கு விரட்டிகள் விவசாயிகளுக்கு வன விலங்குகளால் ஏற்படும் பயிர் சேதத்தைக் குறைக்க உதவுவதுடன் மக்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் மீதான தாக்கத்தை குறைக்கிறது. இந்த முயற்சியின் மூலமாக 12 பெண்கள் உட்பட 75 விவசாயிகள் பயனடைகின்றனர்.

### சூரிய சக்தியில் இயங்கும் பூச்சி பொறிகளை கையளித்தல்

இந்த செயற்திட்டம் 2022 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 மாகாணங்களில் (ஒவ்வொரு மாகாணத்திலும் 15 விவசாயிகள்) 75 விவசாயிகளுக்கு 75 சூரியசக்தியில் இயங்கும் பூச்சிப் பொறிகளை வெற்றிகரமாக கையளித்தது. சூரியசக்தியில் இயங்கும் பூச்சிப் பொறியானது அதிகரித்த உற்பத்தித்திறன் மூலமாக வருடாந்த வருமானத்தை அதிகரிக்க உதவுவதுடன், பூச்சிக்கொல்லிகள் மற்றும் தொழிலாளர்களின் செலவீனத்தைக் குறைப்பதன் மூலம் உற்பத்தி செலவைக் குறைப்பதுடன் GHG வெளியேற்றத்தை குறைக்கின்றது. இந்த உபகரணங்கள் 14 பெண்கள் மற்றும் நலிவடைந்த குழுக்கள் உட்பட 75 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

**தெற்கு-தெற்கு ஒத்துழைப்பின் கீழ் இலங்கையில் விவசாய தொழிற்துறையில் நிலைபேறான சக்தி பயன்பாடுகளுக்கு மாறுவதற்கான செயற்திட்டமானது (TSSC செயற்திட்டம்), இலங்கை, சீன மற்றும் எத்தியோப்பியா அரசாங்களுடன் இணைந்து ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தால் (UNDP) இலங்கை, சீனா மற்றும் எத்தியோப்பியாவினால் முன்னெடுக்கப்படும் ஓர் கூட்டு முயற்சியாகும்.**

U N D P